பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை-4

27 02 2025 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரயாக்ராஜ் மகா கும்பமேளா நாட்டின் அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கும் கலாச்சார பிணைப்பாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. உலகளாவிய சவால்களை முறியடித்து இந்தியா வேகமாக முன்னேறி வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. சென்னை விமான நிலையம் தனியார்மயமாக்கப்படாது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு உறுதியளித்துள்ளார்.

4. தமிழகத்தில் வீட்டுவசதி வாரியம் மூலம், 776 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய குடியிருப்புகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

5. ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தஸ்னிம் மிர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>*-- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<<>>>>>>

உத்திரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் நிறைவடைந்த மகா கும்பமேளா நாட்டின் அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கும் கலாச்சார பிணைப்பாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கும்பமேளா குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடந்த 45 நாட்களில், நாட்டு மக்கள் ஒரே இடத்தில் - ஒரே திருவிழாவில் ஒன்றிணைந்தது மகிழ்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

இந்த மாபெரும் திருவிழா, ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற அடிப்படையில் மக்களின் நம்பிக்கையை போற்றும் வகையில் அமைந்தது என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களின் கடின உழைப்பு, முயற்சி மற்றும் உறுதிப்பாடு காரணமாக மகா கும்பமேளா வெற்றியடைந்திருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே, மகா கும்பமேளா வெற்றிகரமாக நிறைவடைந்ததற்கு, உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளார்.

பிரதமரின் வழிகாட்டுதலும், ஆசிர்வாதமும், அளித்த புத்துணர்ச்சி காரணமாக பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ள முடிந்ததாகவும் திரு யோகி ஆதித்யநாத் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மகா கும்பமேளாவில் பங்கேற்ற பக்தர்களில் சுமார் நான்கரை கோடி பேர் ரயில் பயணம் மேற்கொண்டதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

பிரயாக்ராஜ் ரயில்வே சந்திப்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கும்பமேளாவிற்காக 16 ஆயிரத்திற்கும் அதிகமான ரயில்கள் இயக்கப்பட்டதாக கூறினார்.

கும்பமேளாவிற்கு பயணிகள் எளிதில் சென்றுவர ஏதுவாக, சுமார் ஐந்தாயிரம் கோடி ரூபாய் செலவில் 21 மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகள் கட்டப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ரயில்வே அமைச்சகம், ரயில்வே பாதுகாப்புப்படை, மாநில காவல்துறையினர் மற்றும் ரயில்வே காவலர்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் காரணமாக கும்பமேளா வெற்றிகரமாக முடிவடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மகா கும்பமேளா நாட்டின் நம்பிக்கை மற்றும் ஒற்றுமையின் வெளிப்பாடாக அமைந்தது என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<<>>>>>>

மகா கும்பமேளா மூலம் உத்திரபிரதேச மாநிலத்திற்கு சுமார் மூன்று லட்சம் கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளதாக அகில இந்திய வணிகர் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இதனை தெரிவித்த அந்த கூட்டமைப்பின் தலைவர் திரு பிரவீன் கந்தேல்வால், இந்த கும்பமேளா நாட்டின் மிகப்பெரிய பொருளாதார நிகழ்வுகளில் ஒன்றாகவும் அமைந்ததாக கூறியுள்ளார்.

கும்பமேளாவில் சுமார் 40 கோடி மக்கள் பங்கேற்பார்கள் என்றும், 2 லட்சம் கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது 66 கோடிக்கும் அதிகமான மக்கள் இதில் பங்கேற்று உலகின் மிகப்பெரிய ஆன்மிக சங்கமமாக மாற்றியிருப்பதாகவும் திரு பிரவீன் கந்தேல்வால் தெரிவித்துள்ளார்

<<<<<<>>>>>>

உலகளாவிய சவால்களை முறியடித்து இந்தியா வேகமாக முன்னேறி வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், உலகளாவிய விநியோக சங்கிலிதான் தற்போது பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது என்றார்.

புதிய உலகில் வர்த்தகமும், தொழில்நுட்பமும் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்ட அவர், இந்தியாவின் பங்களிப்பு இதில் அவசியம் என்றும் தெரிவித்தார்.

நடுத்தர மக்கள், ஏழைகள் மற்றும் தொழில் முனைவோரின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதோடு, பல்வேறு அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது அவசியம் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<>>>>>>

சென்னை விமான நிலையம் தனியார்மயமாக்கப்படாது என்று விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

விமான பயணிகளுக்கு குறைந்த விலையில் குடிநீர், தேநீர் உள்ளிட்டவற்றை விற்பனை செய்யும் சிற்றுண்டியகத்தை சென்னை விமான நிலையத்தில் இன்று அவர் தொடங்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், சென்னை விமான நிலையத்தில் தற்போது இரண்டு கோடியே 20 லட்சம் பயணிகள் வந்து செல்வதாகவும், இந்த எண்ணிக்கையை மூன்றரை கோடியாக அதிகரிக்கும் வகையில் சென்னை விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

மூன்றாவது விமான முனைய பணிகள் அடுத்த மாதத்திற்குள் நிறைவடையும் என்றும் அவர் கூறினார்.

பரந்தூர் விமான நிலையம் பற்றிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அங்கு தேர்வு செய்யப்பட்ட இடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும் விமான நிலையம் அமைப்பதற்கான கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்குவது குறித்து மத்திய அமைச்சரவை விரைவில் முடிவு செய்யும் என்றும் தெரிவித்தார்.

உடான் திட்டத்தின்மூலம், விமான பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளதாகவும், பயணிகளின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்ற முன்னுரிமை அளித்து வருவதாகவும் திரு ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குஜராத் மாநிலம் கெவாடியாவில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேலின் ஒற்றுமை சிலையை இன்று பார்வையிட்டு மரியாதை செலுத்தினார்.

அங்கு செயல்பட்டுவரும் திறன் மேம்பாட்டு மையத்தில் பயிற்சி பெறுபவர்களுடன் அவர் கலந்துரையாடவுள்ளார்.

பின்னர் மாலையில் அகமதாபாதில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்தின் 44-ஆவது பட்டமளிப்பு விழாவிலும் குடியரசுத் தலைவர் கலந்துகொள்கிறார்.

<<<<<<>>>>>>

தமிழக வீட்டுவசதி வாரியம் சார்பில், சென்னை, செங்கல்பட்டு, திருச்சி மாவட்டங்களில் சுமார் 776 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட புதிய குடியிருப்புகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று காணொலி வாயிலாக திறந்துவைத்தார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் சுமார் 16 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 25 ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களையும் அவர் திறந்துவைத்தார்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன்காக்கும் கொள்கையையும் அவர் வெளியிட்டார்.

மேலும், இந்து சமய அறநிலையத்துறை சார்பில், கன்னியாகுமரி, புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள கோவில்களில் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செலவிற்கான உயர்த்தப்பட்ட அரசு மானியமாக 27 கோடி ரூபாய்க்கான காசோலைகளையும், கோவில் நிர்வாகிகளிடம் முதலமைச்சர் வழங்கினார்.

<<<<<<>>>>>>

இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 27 பேர் விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர்.

பின்னர் மீனவர்கள் அனைவரும் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*<u>(சவுண்ட் பைட் - சுரேகா – 42 செகண்ட்ஸ்)</u>*

<<<<<<>>>>>>

இந்திய பிராணிகள் நல வாரியத்தின் சார்பில் பிராணி மித்ரா மற்றும் ஜீவ் தயா விருது வழங்கும் விழா புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை இணையமைச்சர்கள் திரு எஸ் பி சிங் பாஹேல் மற்றும் திரு ஜார்ஜ் குரியன் ஆகியோர் இந்த விழாவில் பங்கேற்று விருதுகளை வழங்க உள்ளனர்.

பிராணி மித்ரா விருது ஐந்து பிரிவுகளிலும், ஜீவ் தயா விருது மூன்று பிரிவுகளிலும் வழங்கப்பட உள்ளது.

<<<<<<>>>>>>

தீவிரவாத செயல்களுக்கு உதவும் விவகாரத்தில் பாகிஸ்தான் தலைவர்கள் தவறான தகவல்களை பரப்பி வருவதாக ஐ நா மனித உரிமை கவுன்சிலில் இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற இந்த கவுன்சிலின் கூட்டத்தில் பங்கேற்ற இந்திய பிரதிநிதி திரு தியாகி, லடாக் மற்றும் ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என உறுதிபட தெரிவித்தார்.

ஆனால், பாகிஸ்தான் இஸ்லாமிய அமைப்புகளை தவறாக பயன்படுத்துவது துரதிருஷ்டவமானது என்றும் அவர் கூறினார்.

<<<<<<>>>>>>

உக்ரைன் அதிபர் திரு விளாடிமிர் ஜெலன்ஸ்கி நாளை அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு வருகை தர உள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்டிரம்ப் அறிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நேற்று நடைபெற்ற தமது முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய அவர், முக்கிய கனிமங்களுக்கான உரிமையை உக்ரைனுக்கு, அமெரிக்கா வழங்குவது குறித்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று தெரிவித்தார்.

மேலும் உக்ரைன் போர் தொடர்பான ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

ரஷ்யா – உக்ரைன் இடையே நடைபெற்று வரும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு டொனால்டு ட்டிரம்ப் குறிப்பிட்டார்.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஜெர்மன் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தஸ்னிம் மிர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர், 20-22, 21-18, 21-15 என்ற செட் கணக்கில், கனடாவின் **‘Rachel Chan ’** –ஐ வென்றார்.

-------------

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி, பெங்களூருவில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>**